
# சு. அந்திரேசுப்பிள்ளை
# (செல்லத்துரை)

1915
5
28



1983
01
25

## S. ANTHIRESUPILLAI

929
நினைவு

'திருக்குடும்பகம்'
பத்திமாகிரி
பண்டத்தரிப்பு

'என்னில் விசுவாசங் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்' — இயேசு

# சு. அந்திரேசுப்பிள்ளை

## (செல்லத்துரை)

# நினைவு மலர்

செபஸ்தியாம்பிள்ளை சுவக்கீன்பிள்ளை

சுவக்கீன்பிள்ளை சூசானம்

சுவக்கீன்பிள்ளை றேசமுத்து

சுவக்கீன்பிள்ளை பத்திநாதர்

மலரடிகளிலே

இம் மலர்

சமர்ப்பணம்

EVELYN RUTNAM INSTITUTE
216
REFERENCE LIBRARY
JAFFNA

'Thirukkudumbaham'
Fatimagiri
Pandateruppu

25-7-1984

செபஸ்தியாம்பிள்ளை
சுவக்கீன்பிள்ளை
(† 1952)

அவிராம்பிள்ளை
சூசானம்
(† 1983)

சூசைப்பிள்ளை
செபஸ்தியாம்பிள்ளை
(1959)

வஸ்தியாம்பிள்ளை
ஆறுசிமுத்து
(† 1939)

1. றேசமுத்து († 1982)
2. அந்திரேசுப்பிள்ளை († 1983) — 1940 — திரேசம்மா
(செல்லத்துரை)
3. பத்திநாதர் († 1983)
(சின்னத்துரை)
4. ஆரோக்கியநாதர்

1. மார்கிரட் († 1958)
2. யேசுதாசன்
3. தார்சிலம்மா
4. எலிசபெத்
5. ஜெயதாசன் († 1972)
6. பத்மதாசன்
7. விமலதாசன் († 1983)
8. பாலதாசன்
9. ஜெயநேசம்
10. சகாயதாசன்
11. தேவதாசன்
12. அக்னெஸ்
13. வெலிசீஸ்
14. தேவநேசம் கார்மலா
15. அமலதாசன் கெனடி

929
திருவ

## சில மைல் கற்கள்

| | |
|---|---|
| 1915-5-28 | சு. அந்திரேசுப்பிள்ளை சில்லாலையில் பிறந்தார் |
| 1940-10-23 | செ. திரேசம்மாவைத் திருமணம் புரிந்தார் |
| 1941 | மர வியாபாரம் தொடங்கினர் |
| 1955 | பண்டத்தரிப்பு பிரதான வீதியில் கொள்முதல் செய்த காணியில் தனது வியாபாரத்தைத் திடப்படுத்திக் கொண்டார் |
| 1967 | புடவை வியாபாரம் தொடங்கியதோடு, தாபனங்களுக்கு இயேசுவின் 'திருக்குடும்ப' அடியொற்றி 'திருக்குடும்ப மரக்காலை', 'திருக்குடும்ப ஸ்ரோர்ஸ்' எனப் பெயரிட்டார். |
| 1976 | மரக்காலையில் புதிய மின் அரிவு இயந்திரம் பொருத்தியதுடன், 'சிலுவை ஒளி'யையும் ஏற்றி வைத்தார் |
| 1983-01-25 | விண்ணக நிறைவு எய்தினர் |
| 1983 | இவரால் அமைக்கப்பெற்ற வீட்டிற்கு தனயன் விமலதாசன் 'திருக்குடும்பகம்' என்று பெயரிட்டார் |



# அவர் ஒரு போதும் மனம் மடியவில்லை

**—யாழ். ஆயர்—**

பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. சு. அந்திரேசுப்பிள்ளை (செல்லத்துரை) அவர்கள், பல இன்னல்கள் மத்தியிலும் இறைவன் மீது தவறாத விசுவாசம் கொண்டு வாழ்ந்து வந்தவர். இளவாலையில் பங்குத்தந்தையாக நான் கடமையாற்றிய காலத்திலிருந்து இவரை நன்கு அறிவேன். தனக்கிருந்த இன்னல்களை இவர் எத்தனையோ முறை எனக்கு எடுத்துக் கூறியிருக்கின்றார்; ஆனால் ஒரு போதும் மனம் மடியவில்லை.

இறைவனின் திட்டத்திற்கு முற்றாகப் பணிந்து தன் வாழ்க்கையை இவர் நடத்தி வந்தார். இவரது சிறந்த விசுவாச வாழ்க்கைக்கு இவர் ஊரவர்களே சான்று பகர்வார்கள்.

செல்லத்துரை அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார்: அவருடைய வாழ்க்கைக்காக நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இத்தகைய ஒரு மனிதரை நம் மத்தியில் வாழத் தந்ததற்காக, தம் கிறிஸ்தவ விசுவாசத்தின் மூலம் ஏனையோர்க்கு ஓர் உண்மையான முன்மாதிரியாக இவர் திகழ்ந்தமைக்காக, இவர் ஆற்றிய பல்வேறு அன்புப் பணிகளுக்காக நாம் இறைவனைப் புகழ்வோமாக.

+ வ. தியோகுப்பிள்ளை
யாழ்ப்பாண ஆயர்

*1984.01.25*

# Total Submission to the Will of God

**— Bishop of Jaffna —**

Mr. S. Anthiresupillai (Sellathurai) of Pandateruppu remained steadfast in the faith he placed in God, in spite of the many tribulations he endured. I have known him well from the time I served as Parish Priest at Ilavalai. He would often tell me of his many trials; yet never have I seen him dejected.

His life was one of total submission to the will of God. His villagers will bear witness to his exemplary life in faith.

Mr. Sellathurai rests today in God's presence. Let us thank God for his life: for his remarkable qualities, for his exemplary life in Christian faith and for the good works he did, let us bless the Lord.

Bishop's House
Jaffna
25-1-1984

**+ B. Deogupillai**
Bishop of Jaffna

"I am the resurrection and the life. If anyone believes in me, even though he dies he will live." *(Jn 11.25)*

EVELYN RATNAM INSTITUTE JAFFNA
REFERENCE LIBRARY 216

# கடவுள் பற்றும் தமிழ் உணர்ச்சியும் பொருந்தப் பெற்றவர்

**அ. அமிர்தலிங்கம்**



பண்டத்தரிப்பில் திரு. ''செல்லத்துரை'' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப் பட்ட சுவக் கீன்பிள்ளை அந்திரேஸ்பிள்ளை அவர்களை ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக அறியும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அவருடைய ஆழ்ந்த கடவுள் பற்று, நேர்மை, தமிழ் உணர்ச்சி ஆகியவை என்றும் அவர்பால் ஒரு தனி மதிப்பை என் உள்ளத்தில் ஏற்படுத்தியிருந்தன. சென்ற ஆண்டு தைத் திங்கள் அவரின் திடீர் மறைவு பெரும் அதிர்ச்சி தரும் செய்தியாக எட்டியது. அவரின் மரணச் சடங்கில் பங்கு கொண்டு என் இறுதி அஞ்சலியையாவது செலுத்தும் சந்தர்ப்பம் கிடைத்ததென்று ஆறுதல் அடைந்தேன்.

ஆனல் அக்குடும்பத்தின் ஒளி விளக்காகத் திகழ்ந்த அன்னரின் குமாரன் விமலதாசன் எதிர்பாராத வகையில் 24–7–1983ல் இராணுவத்தினரின் கொலை வெறிக்குப் பலியானது ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இளம் வயதில் பட்டப் படிப்பை முடித்து மக்கள் சேவையில் ஈடுபட்ட இவ்விளைஞர் மனித உரிமைகளைப் பேணும் வகையில் நடாத்திவந்த ''மனிதன்'' என்ற சஞ்சிகை கற்றோர் மத்தியில் கணிசமான செல்வாக்கைப் பெற்றிருந்தது.

ஈழத்தில் தமிழனுக்கு மனித உரிமைகளின் அடிப்படையான உயிர் வாழும் உரிமையே எவ்வளவு தூரம் மறுக்கப்பட்டிருக்கின்றது என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் திரு. விமலதாசனின் மறைவு அமைந்தது. தமிழ் இனத்திற்கே பெரும் பயன் தரும் விருட்சமாக வளரும் என்று நாமெல்லாம் எதிர் பார்த்த இக் கொழுந்து மிக இளம் வயதில் அழிக்கப்பட்டு விட்டது. ஆண்டவன் சித்தம் அதுவானல் யார் என்ன செய்ய முடியும்?

குடும்பத் தலைவனை இழந்து அரையாண்டில் குலக் கொழுந்தையும் பறிகொடுத்துத் தவிக்கும் இக் குடும்பத்திற்கு இறைவன் தான் ஆறுதலை அளிக்க முடியும்.

திரு. அந்திரேஸ்பிள்ளை, செல்வன் விமலதாசன் ஆகியோர் ஆத்மா சாந்தி அடைவதாக.

**A. Amirthalingam** — அ. அமிர்தலிங்கம்
Secretary General — செயலாளர் நாயக
Tamil United Liberation Front (TULF) — தமிழர் விடுதலைக் கூட்டணி

*18–5–1984*

# ஓர் இலட்சிய மனிதர்

— வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை —

இலட்சியமே உலகை ஆளுகின்றது. உயர்ந்த இலட்சியம் உடையவர்களே உலகை உய்விக்கும் தலைவர்களாகத் திகழ்கிறார்கள். அமரர் அந்திரேசுப்பிள்ளை ஓர் இலட்சிய புருடராகவே எம் மத்தியில் வாழ்ந்தார். அவர் ஆயிரத்தில் ஒருவர்: ஆம் முப்பது வருடங்கள்—ஒரு தலைமுறை காலமாக எம்முடன் நெருங்கிப் பழகிய அரிய நண்பரைப் பற்றி அடியேனது தீர்க்கமான முடிவு இதுவே! 'செல்லத்துரை' என அவர் செல்லமாக அழைக்கப்பட்டதற்கும் நிறைந்த பொருள் உண்டு.

அவரது சொல்லும் செயலும் ஒன்றே; உடையும் நடையும் ஒன்றே: வெள்ளை உள்ளத்தைப் பிரதிபலிக்கும் தூய வெள்ளை உடையே அவரது நிரந்தர ஆடை. கார் மேனியரெனினும் அடிக்கடி பளிச்சென்று மின்னும் பல்லொளி மிளிரும் அவர் முகத்தினழகை எம்மால் மறக்கவே முடியாது. உடைந்த மனம் அவரிடம் இல்லை. துன்பங்களில் புடமிடப்பட்டவரானாலும், 'படைத்தவன் சித்தப்படி ஆகட்டும்' என்று அமைதி இன்பங் கண்ட, புதிய ஏற்பாட்டின் 'யோபு மகாத்மா'. சாத்தானின் சேட்டைகளுக்குத் தலைவணங்கா மன்னன். திருமறை ஆயர்கள், அடியார்களின் ஆப்த நண்பர். தம் வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படையில் தாமே எழுதிய 'அன்பு நிறைந்த தந்தாய்...' என்ற இரங்கல் பஜனைச் செபம், கடவுள் மேல் அவருக்கிருந்த விசுவாசத்துக்கும், உழுவலன்புக்கும் ஒரு கட்டளைக் கல்லாகும்.

தமிழ் இனத்துக்காக, 'மலையே வா, தலையே சும' என்று தலைநிமிர்ந்து நின்ற வீர மறவன். உண்மைத் தமிழ்த் தலைவர்களுடன் என்றும் ஒன்றி வாழ்ந்து தன்னையே ஈந்த தானைத் தலைவன். இவரது இலட்சிய வாழ்வு 'தமிழ் வீர உணர்ச்சி' மண்புக்கு மாயாமல் தழைத்தோங்க உதவியதென்றால் அது உண்மையிலும் உண்மையே. சமூகத்துக்காக வாழ்ந்த சமூகசோதி; ஏழை எளியோருக்கும் தரும தானங்களுக்கும் வரையாது வழங்கிய வள்ளல். மரியாளின் தாசனுய்ப்ப ணியாற்றிய 'மரியாயின்சேனை' ஊழியன்.

குடும்பக் கட்டுப்பாட்டை அரைக்காசுக்கும் மதியாத இல்லறத்தாரின் ஒளி விளக்கு. பதினைந்து பிள்ளைச் செல்வங்களைப் பயந்து நன்னெறியில் வளர்த்த நற்றந்தை. தனக்குரிய இலட்சியப் போக்கில் அத்தனை பிள்ளைகளின் பெயர்களையும் 'தாசன்', 'ஜெயம்' என்ற இரண்டு ஈற்றுச் சொற்களுள் அடக்கிய அறிஞன். அமரரின் ஆறு மகன்மாருக்கும் ஆசிரியனாகப் பணியாற்றக் கிடைத்தது எனது பாக்கியமே.

'தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்'

'தந்தை எவ்வழி, தனயன் அவ்வழி' என்றபடி, அவரது மகன் அமரர் விமல தாசன் ஓர் இலட்சிய வீரர் வரிசைக்குரியவர். மனித மாண்பையும், தமிழினத்தின் உரிமையையும் காக்க உழைத்த மாணவ மணியை 24.7.1983 அதிகாலை ஆணவங் கொண்ட அரச இராணுவம் சுட்டழித்தமை எம்மனோருக்கு அளக்கலாகாப் பேரிழப்பே. இங்ஙனம் இரண்டு இலட்சியவாதிகளையும் சமூகத்துக்குப் புலப்படுத்த எனக்கு ஒரு வாய்ப்பை அளித்த செல்வன் தேவதாசனுக்கு எனது நன்றி உரித்தாகுக.

எம்மை விட்டு மறைந்த தந்தை, தனயன் இருவருடையவும் ஆன்மாக்கள் இறைவனடி நீடு வாழப் பிரார்த்தித்து, நினைவாஞ்சலி செலுத்தி நிற்கின்றேன்.

வணக்கம்.

இளவாலை
21-6-1984

# He stood by every word he uttered

**— James T. Ratnam —**

"Full many a gem is born to blush unseen," the poet has truthfully said, but the line that followed, "and waste its sweetness in the desert air", may not apply to the subject I feel compelled as a matter of duty to write about here. For he—S. Anthiresupillai (Sellathurai) of Pandatharippu—did not really waste his life or sweetness, albeit in the desert air.

He was 68 years old when he died on the 25th of January this year. He was a kind and gentle soul, soft-spoken and wise, ever ready to listen and serve, whenever he was called. He was but a village tradesman, withal a noble gentleman—thus a gem to blush unseen.

Having known him almost a lifetime, I had watched his career from his striving beginnings and found them an object lesson for aspiring young men.

He spoke little, but stood by every word he uttered. A man of simple faith ever willing to obey the commandments and the rules, he seemed to have weathered the crises that often challenge such men.

Contentment and satisfaction marked his end. He had a devoted wife and a large family, and I have no doubt his children will now arise to call him blessed.

* *

# தத்தளிக்காத விசுவாசம் கொண்ட கிறிஸ்தவன்

— அருள்திரு. Z. N. குரூஸ் —

அமரர் செல்லத்துரை பண்டத்தரிப்பில் நான் இருந்த காலத்தில் என்னோடு நெருங்கிப் பழகிய ஓர் ஆப்த நண்பர். கிறிஸ்தவர்கள் என்று வாழும் அனைவரும் உண்மையான கிறிஸ்தவர்களல்லர்; உண்மையான விசுவாசிகளும் அல்லர். நோய்நொடி அவர்களுக்கு வந்துவிட்டால், அப்பொழுதே ஒவ்வொருவருடைய விசுவாசத்தின் ஆழத்தைக் காணக்கூடியதாயிருக்கும். செல்லத்துரையினுடைய விசுவாசமோ மிகமிகப் பெரிது. அவருடைய வாழ்க்கை இன்னல்கள், பிரச்சினைகள் நிறைந்த ஒரு வாழ்க்கையாகவே இருந்தபோதிலும் தனது விசுவாசத்தில் அவர் ஒருபோதும் தத்தளித்தவரல்லர்.

செல்லத்துரை தன்னுடைய பிரச்சினைகளை என்னுடன் அடிக்கடி பகிர்ந்து கொள்வார்; அவருடைய விசுவாசத்தின் ஆழத்தை அளவிட எனக்கு இத்தருணங்கள் வாய்ப்பளித்தன. நான் தனித்திருக்கும் நேரங்களில் எனது விசுவாசத்தை அவருடைய விசுவாசத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து வியந்ததும் உண்டு. அவ்வேளை இறைமகன் இயேசு கனானேயப் பெண்ணை நோக்கி, ''பெண்ணே உன் விசுவாசம் பெரிது'' என்று மெச்சிப் பாராட்டியது என் ஞாபகத்துக்கு வராமல் இராது. அவரது விசுவாசத்தின் ஒரு வெளி அடையாளமாக அவர் உருவாக்கிய மரக்காலையில் காட்சியளிக்கின்றது, அவர் நிறுவிய சிலுவையும் அதில் பொறித்துள்ள இறைவாக்கும்.

அவர் வாழ்ந்த விசுவாச வாழ்க்கையில் தம் பிள்ளைகளையும் வாழ்வித்தார் என்ப

தில் ஐயமில்லை. 1975இல் உரோமை நகருக்கான 'யூபிலி ஆண்டுத் திருப்பயணத்திலே' பங்கு கொள்வதற்கு இளவாலை மறை வட்ட இளவாலிபர்களின் பிரதிநிதியாக இவருடைய புதல்வர்களுள் ஒருவரான விமலதாசன் தேர்ந்தெடுக்கப்பட்டது எவர்க்கும் ஆச்சரியமானதொன்றல்ல. மைந்தனுக்குக் கிடைத்த பாக்கியத்திலே தந்தையும் மகிழ்வுற்றார்.

அவரது விசுவாச வாழ்வு அவர் குடும்பத்தினர் அனைவருக்கும் நம்பிக்கையின் சின்னமாகவும், தூண்டுதலாகவும் என்றும் இருந்துள்ளது. ஆண்டுதோறும் இயேசுவின் திரு இருதய அரசாட்சி நிறுவுதலைப் புதுப்பிக்கும் அந்தக் குடும்பத்திலே, உண்மையில் இயேசுவின் மகிழ்வும், அமைதியும் நீங்காது நிலவி வந்துள்ளன.

தமது ஊழியன் செல்லத்துரையை இறைவன் ''நன்று நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே, உன் தலைவனின் மகிழ்ச்சியில் பங்கு கொள்'' என்று வான் வீட்டில் அன்புடன் வரவேற்பதை நினைந்து மகிழ்ச்சி யடைகின்றேன்.

216
EVELYN ... STITUTE
LIBRARY

*　　　　*

# ஊருக்கு உழைப்போரை ஈந்தவர்

**— சிலன் கதிர்காமர் —**

**26-01-1983 அன்று அமரரின் மரணச் சடங்கில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. சிலன் கதிர்காமர் அவர்கள் ஆற்றிய உரையின் ஒருபகுதி.**

நாங்கள் ஒன்றுபடும் நேரங்களில், எங்கள் பெற்றோர் முன்னோர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்த வேண்டும்.

இந்தக் குடும்பத்தில் அமரருடைய பிள்ளைகளில் ஒருவர் குருத்துவ சேவைக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ளார். இன்னொரு மகனை திரு. விமலதாசனை நான் நன்கு அறிவேன். அவர் பல்கலைக்கழகத்தில் படித்த பொழுதும், பின்பும் மனிதன் பத்திரிகை ஆசிரியராகவிருந்தார். இந்தப் பத்திரிகை வழியாக மக்கள் மத்தியில் புதிய உணர்வுகளை, புதிய சிந்தனைகளை ஏற்படுத்துவதில் ஈடுபட்டு வந்திருக்கின்றார்.

பிறகு இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான எங்கள் இயக்கம் அமைக்கப்பட்டபோது அதில் முக்கிய உறுப்பினராகக் கடமையாற்றி, இன்றைக்கு எங்கள் இயக்கம் மனித உரிமைகளுக்காக இலங்கை முழுவதிலும் உழைக்கும் இந்த நேரத்தில் அவர் பெருந் தொண்டாற்றி வருகின்றார்.

இப்படியான பிள்ளைகளைப் பெற்ற ஆசீர்வாதம் காலஞ்சென்ற திருவாளர் அந்திரேசுப்பிள்ளைக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. இந்த நினைவுகளையெல்லாம் முன்வைத்து இவ்வேளையில் நன்றி செலுத்துகின்றோம். அவருடைய நினைவுகள் மூலம், அவருடைய சேவைகள் மூலம், அவர் குடும்பத்தினர்க்கு ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும், அமைதி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

# அமரரின் நாளாந்த பஜனை வேண்டுதல்

அன்பு நிறைந்த தந்தையே!
இரக்கம் நிறைந்த தந்தையே!
கருணை நிறைந்த தந்தையே!
(3 முறை)

நான் ஒரு பாவி தந்தாய்! (3 முறை)
என்னை மன்னித்திடு! (3 முறை)

என்னை மன்னித்து, உனது அன்பிலே, அருளிலே,
ஒளியிலே வாழும் வரந் தா இறைவா! (3 முறை)

உன் திருவுளப் படியே வாழும் வரந் தா,
இறைவா! இறைவா! இறைவா! (3 முறை)

St. JOSEPH'S CATHOLIC PRESS JAFFNA